## CAMPUS CONNECT

### Graduation Day

The 32nd Graduation Day of P.S.N.A. College of Engineering and Technology, Dindigul, was held on January 25. A total of 475 graduates from mechanical and civil engineering departments received their degrees. Somasundaram Lakshmanan, MD, TECTON Group of Companies, Abu Dhabi, was chief guest. College Chairperson K. Dhanalakshmi, Pro-Chairman R.S.K. Raguram and Vice-Chairman R.S.K. Sukumaran presided over the function.

### Quiz competition

GTN Arts College, Dindigul, along with Rotary Club of Dindigul West and WOKworld Foundation, a non-profit organisation focussing on education, organised a written quiz contest on the topic 'India in general' on January 12.
The winners were felicitated at GTN Arts College on January 23.
The competition was organised to create more awareness among students and to prepare them to face competitive examinations.
A total of 900 students from across the State participated in the competition.

### Pongal celebrations

The students of Hajee Karutha Rowther Howdia College, Uthamapalayam, celebrated 'Samathuva Pongal' on January 14.
The aim was to create harmonious relationships among students.
Students participated in events like uriyadi and silambattam. Cultural events were also held as part of celebrations.

### Workshop held

Ramco Institute of Technology, Rajapalayam, along with ISTE faculty and student chapter, organised a two-day workshop on "LaTeX document preparation language" on January 24. Fifty students and faculty members participated. S. Valai Ganesh, Assistant Professor, Department of Mechanical Engineering, handled the sessions of the seminar.

### Meet on Algebra,Analysis

Saiva Bhanu Kshatriya College Aruppukottai organised a national seminar on 'algebra and analysis. M V A M Suthagar president Aruppukottai Nadargal Uravinmurai Trust presided.
N. Muthuselvan principal welcomed.
R. Roopkumar of Central University Tiruvarur, V. Vilfred of Central University, Kerala, and N .Muthuchelvan of Government College of Technology, Coimbatore, addressed the sessions.

### Seminar held

Dr. Zakir Hussain College, Sivaganga, and Tamil Nadu State Council for Science and Technology jointly organised a two-day seminar on recent trends in nanotechnology.
During the inaugural session, College President Alhaj A.A. Mohamed Zubair released a souvenir and delivered the presidential address.
Experts from various colleges delivered lectures on the importance and latest trends in nanotechnology.

Published by N. Ravi at Kasturi Buildings, 859 & 860, Anna Salai, Chennai-600002 and Printed by T. Murali at Survey No. 38/2 to 40/2B, Madurai-Rameswaram Road, Puliankulam Village, Madurai South Taluk, Madurai-625201 on behalf of THG PUBLISHING PVT LTD., Chennai-600002. Editor: Suresh Nambath (Responsible for selection of ne
Regd. TN/MA/7/2018-2020 • RNI No. TNENG/1978/49962 • ISSN 0971 - 751X • Vol. 43 • No. 29

CM
K

# ENGAGEMENTS

## RAJAPALAYAM

**Ramco Institute of Technology:** Display of solar cars, school students to participate, CEO of Ramco Group of Institutions R. Venkatraj, Sonu Singh, engineer, Renault-Nissan Technology and Business Centre, Priyanka Sharma, assistant manager event cell, ISIEINDIA, chief guests, 8 a.m.

C M
K

ராஜபாளையம் ராம்கோவின் ஆர்ஐடி கல்லூரியில்

# நாளை தேசிய அளவிலான பள்ளி மாணவர்களுக்கான விஞ்ஞான போட்டிகள்

ராஜபாளையம், பிப்.01-

ராஜபாளையம் ராம்கோ இன்ஸ்டிடியூட் ஆஃப் டெக்னாலஜி எனும் பொறியியல் கல்லூரியில் தேசிய அளவில் சூரிய ஆற்றல் கல்வித்திட்டம் மற்றும் 6 முதல் 12ம் வகுப்பு பள்ளி மாணவ, மாணவிகளுக்கான விஞ்ஞான வளர்ச்சி குறித்த சாம்பியன்சிப் போட்டிகள் பிப்ரவரி 2ம் தேதி நாளை காலை 8 மணியளவில் துவங்கி நடைபெற உள்ளது.

இப்போட்டிகளுக்கான நிதி உதவியை எம்.எஸ்.ஏம்.இ, எம்.என்.ஆர்.இ, எஃப்.எஸ்.எம்.ஐ., ஹீரோ எலக்ட்ரிக் மற்றும் ராம்கோ இன்ஸ்டிடியூ ஆஃப் டெக்னாலஜி கல்லூரியின் முன்னாள் மாணவர்கள் சங்கம் இணைந்து வழங்குகிறது.

இங்கு நடக்கும் சாம்பியனசிப் போட்டிகளில் தேசிய அளவில் ஆந்திரா, தமிழ்நாடு உள்ளிட்ட நாடு முழுவதிலிருந்தும் 360க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் பங்கேற்கின்றனர்.

இங்கு நடக்கும் போட்டிகளில் பங்கேற்பவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட உள்ளன. பரிசு மொத்த தொகை ரூ. 50 ஆயிரம் ஆகும். இங்கு நடக்கும் சாம்பியன்சிப் போட்டிகளில் மாணவ, மாணவிகளுக்கு விஞ்ஞான அறிவு, ஆக்கப்பூர்வ சிந்தனை, பரிசோதனை மற்றும் குழுப்பணி ஆகியவற்றை உயர் செயல்திறன் கொண்ட சூரிய சக்தியில் இயங்கும் ரிமோட் கண்டரோல் வாகனங்களை வடிவமைக்கவும், கட்டமைக்கவும் உறுதுணையாக இருக்கும்.

ஒரு குழுவில் குறைந்த பட்சம் ஒரு ஆசிரியர் அல்லது ஒரு வழிகாட்டியுடன் இணைந்து பள்ளி அணிகளுக்காக ராம்கோ இன்ஜினியரிங் கல்லூரியின் பல்வேறு பிராந்திய மையங்களில் நடக்கும் இந்த நிகழ்வை ஐ.என்.ஐ.என்.டி.ஏ. ஏற்பாடு செய்கிறது. இப்போட்டியில் வெற்றி பெருபவர்கள் மார்ச் 2020ல் டெல்லியில் நடக்கும் இறுதிப் போட்டியில் பங்கேற்க தகுதி பெருவர். இதன் மொத்த பரிசுத் தொகை ரூ. 5 லட்சம் ஆகும்.

இதற்கான ஏற்பாடுகள் ராம்கோவின் ஆர்.ஐ.டி கல்லூரி முதல்வர் முனைவர் கணேசன், துணை முதல்வர் முனைவர் ராஜகருணாகரன், கல்லூரியின் டி.ஜி.எம். செல்வராஜ் ஆகியோர் வழிகாட்டுதலின் பேரில் இயந்திரவியல் துறை உதவி பேராசிரியர்கள் லக்ஷ்மணன், பிரபுராம் ஆகியோர் ஆர்.ஐ.டி. கல்லூரி வளாக பிரதான ஹாலில் வெகு சிறப்பாக செய்து வருகின்றனர்.

*DinaSangu*

*02.02.2020*

*Dinamalar* 03.02.2020

# தென்னிந்திய அளவிலான சோலார் வாகன போட்டி

ராஜபாளையம், பிப்.3–

ராஜபாளையம் ராம்கோ இன்ஜி., கல்லுாரியில் 6 முதல் 12 ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு சோலார் வாகனசாம்பியன் ஷிப் போட்டிகள் நடந்தது.

தென்னிந்திய அளவில் தேர்ந்தெடுக்கப்பட்ட 13பள்ளிகளில் இருந்து 36 குழுக்களை சேர்ந்த 360 மாணவர்கள் பங்கேற்றனர். கல்வி குழும சி.இ.ஓ., வெங்கட்ராஜ், ரொனால்ட் நிசான் டெக்னாலஜி சோனு சிங், பிரியன்ங் சர்மா பங்கேற்று பேசினர். கல்லுாரி முதல்வர் கணேசன், துணை முதல்வர் ராஜகருணாகரன், துணை பொது மேலாளர் செல்வராஜ் முன்னிலை வகித்தனர்.

ரிமோட் மூலம் களப் பாதைகளில் வளைத்து ஓட்டி விரைவாகவும், களத்தை விட்டு வெளியேறாமல் கட்டளைக்கு ஏற்ப சென்ற வாகனங்களை வடிவமைத்த மாணவர்கள், மதிப்பெண் மூலம் வெற்றியாளர்களாக அறிவிக்கப் பட்டனர்.

சென்னை சின்மயா வித்யாலயா முதல் பரிசும், விசாகபட்டினர் சி.டி.எஸ். தேவ் பள்ளியும், விருதுநகர் ராம்கோ வித்யாலயா மூன்றாம் பரிசையும் வென்றன.

வெற்றி பெற்ற மாணவர்கள் ஏப்., மாதம் டெல்லியில் நடைபெற உள்ள தேசிய அளவிலான போட்டிகளில் பங்கேற்பர் என கல்லுாரி நிர்வாகத்தினர் தெரிவித்தனர். ஏற்பாடுகளை இயந்திரவியல் பிரிவு உதவி பேராசிரியர்கள் லட்சுமணன், பிரபுராம் செய்தனர்.




ராம்கோ இன்ஜி., கல்லுாரியில் நடந்த மாணவர்களுக்கான சோலார் வாகன போட்டியில் முதலிடம் பெற்ற சென்னை சின்மயா வித்யாலயா பள்ளி மாணவர்கள்.

## ராஜபாளையம் கல்லூரியில்

# தென்னிந்திய அளவிலான சூரிய ஆற்றல் வாகன சாம்பியன்ஷிப் போட்டிகள்



**ராஜபாளையம் ராம்கோ கல்லூரியில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற சூரிய ஆற்றல் வாகன சாம்பியன்ஷிப் போட்டியில் கலந்து கொண்ட மாணவர்கள்.**

**ராஜபாளையம், பிப். 2:** ராஜபாளையம் ராம்கோ தொழில்நுட்பக் கல்லூரியில் தென்னிந்திய அளவிலான, பள்ளி மாணவர்களுக்கான சூரிய ஆற்றல் வாகன சாம்பியன்ஷிப் போட்டிகள் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றன.

இதில், சிறப்பு விருந்தினராக ராம்கோ குழுமத்தின் தலைமைக் கல்வி அதிகாரி வெங்கட்ராஜ் கலந்து கொண்டார். மேலும், இப்போட்டியின் நடுவார்களாகவும் கூடுதல் சிறப்பு விருந்தினர்களாகவும், ரெனால்ட்- நிசான் டெக்னாலஜி அண்ட் பிசினஸ் சென்டர் நிறுவனத்தைச் சேர்ந்த பொறியாளர் சோனு சிங் மற்றும் ஐ.எஸ்.ஐ.இ. இந்தியாவின் உதவி மேலாளர் பிரியங்க் சர்மா ஆகியோர் கலந்து கொண்டனர். முன்னதாக கல்லூரியின் இயந்திரவியல் துறை நான்காம் ஆண்டு மாணவரும் ஆர்.ஐ.டி. பீனிக்ஸ்-ன் கேப்டனுமான நிதிஷ் வரவேற்றார்.

குறிப்பாக 4 சுற்றுக்களாக நடைபெற்ற இப்போட்டியில் 13 பள்ளிகளில் இருந்து 36 குழுக்கள் பங்கேற்றன. இதில் ஆந்திரா மற்றும் தமிழ்நாட்டின் பல பகுதிகளில் இருந்தும் 360-க்கும் மேற்பட்ட போட்டியாளர்கள் கலந்து கொண்டனர். இப்போட்டிக்கான நிதியுதவியினை எம்.எஸ்.எம்.இ, எம்.என்.ஆர்.இ, எஃப்.எஸ்.எம்.ஐ, ஹீரோ எலக்ட்ரிக் மற்றும் ஆர்.ஐ.டி. முன்னாள் மாணவர்கள் சங்கம் இணைந்து வழங்கினர். இப்போட்டியின் மொத்த பரிசுத் தொகையின் மதிப்பு ரூ. 50 ஆயிரம் ஆகும். இதில் முதல் பரிசான ரூ. 15 ஆயிரத்தை சென்னையைச் சேர்ந்த சின்மயா வித்யாலயாவும், இரண்டாம் பரிசான ரூ. 10 ஆயிரத்தை விசாகப்பட்டினத்தைச் சேர்ந்த சி.டி.எஸ். தேவ் பப்ளிக் பள்ளியும், மூன்றாம் பரிசான ரூ. 5 ஆயிரத்தை விருதுநகர் ராம்கோ வித்யாலயா பள்ளி மாணவர்களும் பெற்றனர். மேலும், இப்போட்டியில் கலந்து கொண்ட மாணவர்களை ஊக்குவித்து, பாராட்டும் விதமாக 6 சிறப்பு பரிசுகளுடன், ரொக்கப் பரிசுகளும் வழங்கப்பட்டன.

இப்போட்டியில் கலந்து கொண்டு வெற்றிபெற்றவர்கள் வரும் ஏப்ரல் மாதம் டெல்லியில் நடைபெறவிருக்கும் இறுதிப் போட்டியில் பங்கேற்பார்கள். இதன் மொத்த பரிசுத் தொகையானது ரூ.5 லட்சமாகும். இதற்கான ஏற்பாடுகளை கல்லூரி முதல்வர் கணேசன், துணை முதல்வர் ராஜ கருணாகரன் மற்றும் கல்லூரியின் துணைப் பொது மேலாளர் செல்வராஜ் ஆகியோரின் வழிகாட்டுதலின்படி இயந்திரவியல் துறை உதவிப் பேராசிரியர்கள் லட்சுமணன் மற்றும் ஜி.பிரபுராம் ஆகியோர் செய்திருந்தனர்.

தினபூமி, மதுரை
பிப்ரவரி.03, 2020
thinaboomi.com

## ராஜபாளையம் ராம்கோ தொழில்நுட்பக் கல்லூரியில்

# தென்னிந்திய அளவில் பள்ளி மாணவர்களுக்கான சூரிய ஆற்றல் வாகன சாம்பியன்ஷிப் போட்டி

**ராஜபாளையம், பிப்.3-**

ராஜபாளையம் ராம்கோ தொழில்நுட்பக் கல்லூரியில் தென்னிந்திய அளவிலான, பள்ளி மாணவர்களுக்கான, இந்தியாவின் முதல் மற்றும் தனித்துவ சூரிய ஆற்றல் வாகன சாம்பியன்ஷிப் போட்டியானது பிப்ரவரி 02-ஆம் தேதி அன்று கல்லூரி வளாகத்தில் சிறப்பாக நடைபெற்றது. காலை 9 மணிக்கு ஆரம்பமான தொடக்க விழாவில், சிறப்பு விருந்தினராக ராம்கோ குழுமத்தின் தலைமை கல்வி அதிகாரி முனைவர் ஆர். வெங்கட்ராஜ் அவர்கள் கலந்துகொண்டு விழாவினை சிறப்பித்தார். மேலும், இப்போட்டியின் நடுவார்களாகவும் கூடுதல் சிறப்பு விருந்தினர்களாகவும், ரெனால்ட்-நிசான் டெக்னாலஜி & பிசினஸ் சென்டர் பிரைவேட் லிமிடெட்-ஐ சேர்ந்த திரு. சோனு சிங் அவர்களும், ஐ.எஸ்.ஐ.இ. இந்தியா-வின் உதவி மேலாளர், திரு. பிரியங்க் சர்மா, அவர்களும் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள். இவ்விழாவில் தலைமையேற்று பேசிய முனைவர் ஆர்.வெங்கட்ராஜ் அவர்கள், இப்போட்டியானது இளைஞர்களை ஊக்குவிக்கவும், விஞ்ஞானிகளாக மற்றும் பொறியியலாளர்களாக மாணவர்கள் புதிய வாகனம் மற்றும் எரிபொருள் தொழில்நுட்பங்களை உருவாக்கும் குடிமக்களாகவும், சுற்றுச்சூழல் மற்றும் பொருளாதார தேவைகளை சமநிலைப்படுத்தும் முடிவுகளை எடுப்பார்கள் என்று கூறினார். மேலும் இவ்வுலகம், புதுப்பிக்க முடியாத எரிசக்தி ஆதாரங்களை நோக்கி நகர்கிறது என்றும் எடுத்துரைத்தார். இதனைத் தொடர்ந்து பேசிய திரு. சோனு சிங் அவர்கள் தற்போதைய



தொழில்நுட்பமானது எவரிடம் தனித்துவமும் திறமையும் உள்ளதோ அவர்களை வரவேற்க தயாராக இருக்கிறது என்று கூறினார். மேலும், அவரைத் தொடர்ந்து பேசிய திரு. ப்ரியன்க் சர்மா அவர்கள் பேசுகையில் கடந்த பத்து வருட காலமாக குறிப்பாக பள்ளி மாணவர்களை இது போன்று போட்டிகளில் பங்கேற்க செய்து கொண்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

முன்னதாக கல்லூரியின் இயந்திரவியல் துறை நான்காம் ஆண்டு மாணவரும் ஆர் ஐ டி பீனிக்ஸ்-ன் கேப்டனுமான திரு எஸ் நிதிஷ் அவர்கள் இவ்விழாவிற்கான வரவேற்புரை ஆற்றினார். அதனை தொடர்ந்து கல்லூரியின் முதல்வர் இவ்விழாவிற்கான சிறப்புரையை வழங்கினார்.இதன்பின், இப்போட்டியினை கல்லூரியின் முதல்வர் முனைவர் எல். கணேசன் அவர்களும் சிறப்பு விருந்தினர்களான திரு.ப்ரியன்க் ஷர்மா மற்றும் திரு சோனு சிங் அவர்களும் இணைந்து கொடி அசைக்க இப்போட்டியானது இனிதே ஆரம்பமானது.




குறிப்பாக 4 சுற்றுக்களாக நடைபெற்ற இப்போட்டியில் கலந்து கொள்ள 13 பள்ளிகளில் இருந்து 36 குழுக்களாக, ஆந்திரா மற்றும் தமிழ்நாட்டின் பல பகுதிகளில் இருந்தும் 360-க்கும் மேற்பட்ட போட்டியாளர்கள் பங்கேற்றனர்.

இப்போட்டிக்கான நிதியுதவியினை எம்.எஸ்.எம்.இ. எம்.என்.ஆர்.இ, எஃப்.எஸ். எம்.ஐ, ஹீரோ எலக்ட்ரிக் மற்றும் ஆர்.ஐ.டி முன்னாள் மாணவர்கள் சங்கம் இணைந்து வழங்கினர்.

இப்போட்டியின் மொத்த பரிசுத்தொகையின் மதிப்பு ரூபாய் ஐம்பதாயிரம் ஆகும். இதில் முதல் பரிசான ரூபாய் 15,000-த்தினை சென்னையை சேர்ந்த சின்மய வித்யாலயாவும், இரண்டாம் பரிசாக ரூபாய் 10,000-தினை விசாகபட்டினத்தினை சேர்ந்த சி.டி எஸ்.தேவ் பப்ளிக் பள்ளியும், மேலும், மூன்றாம் பரிசாக ரூபாய் 5,000-தினை விருதுநகர் ராம்கோ வித்யாலயா பள்ளி மாணவர்களும் பெற்றனர். மேலும், இப்போட்டியில் கலந்துகொண்ட மாணவர்களை ஊக்குவித்து, பாராட்டும் விதமாக ஆறு சிறப்பு பரிசுகளுடன், ரொக்கப் பரிசுகளும் வழங்கப்பட்டன.

இப்போட்டியில் கலந்து கொண்டு வெற்றிபெற்றவர்கள் வருகின்ற ஏப்ரல் 2020-இல் டெல்லியில் நடைபெறவிருக்கும் இறுதிப் போட்டியில் போட்டியிடுவார்கள்.இதன் மொத்த பரிசுத்தொகையானது ரூபாய் ஐந்து லட்சமாகும். கல்லூரியின் முதல்வர் முனைவர் எல். கணேசன், துணை முதல்வர் முனைவர் எஸ். ராஜகருணாகரன் மற்றும் கல்லூரியின் துணைப் பொது மேலாளர் திரு. கே. எஸ். செல்வராஜ் அவர்களின் வழிகாட்டுதலின்படி இயந்திரவியல் துறை உதவிப்பேராசிரியர்கள் திரு.எம். லக்ஷ்மணன் மற்றும் ஜி.பிரபுராம் அவர்கள் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார்கள்.

*maalaimurasu*



ராஜபாளையம் ராம்கோ பொறியியல் கல்லூரியில் இந்தியாவிலேயே முதன்முறையாக சூரியமின் சக்தி கார் இயக்கும் நிகழ்ச்சியில் மாணவ, மாணவியர், கல்லூரி முதல்வர் கணேசன், துணை முதல்வர் ராஜா கருணாகரன், முதன்மை கல்வி அலுவலர் டாக்டர் வெங்கட்ராமன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### ராஜபாளையத்தில்

# சூரிய ஆற்றல் வாகன சாம்பியன்ஷிப் போட்டி!

ராஜபாளையம், பிப். 3–

ராஜபாளையம் ராம்கோ தொழில்நுட்பக் கல்லூரியில் பள்ளி மாணவர்களுக்கான சூரிய ஆற்றல் வாகன சாம்பியன்ஷிப் போட்டி ராம்கோ குழுமத்தின் தலைமை கல்வி அலுவலர் ஆர்.வெங்கட்ராஜ் தலைமையில் நடைபெற்றது. சிறப்பு விருந்தினராக சோனு சிங், ப்ரியன்க் சர்மா கலந்து கொண்டனர். முன்னதாக கல்லூரியின் இயந்திரவியல் துறை நான்காம் ஆண்டு மாணவரும் ஆர் ஐ டி பீனிக்ஸ்ன் கேப்டனுமான எஸ் நிதிஷ் அனைவரையும் வரவேற்றார். அதனை தொடர்ந்து கல்லூரியின் முதல்வர் இவ்விழாவிற்கான சிறப்புரையை வழங்கினார்.

4 சுற்றுக்களாக நடைபெற்ற இப்போட்டியில் கலந்து கொள்ள 13 பள்ளிகளில் இருந்து 36 குழுக்களாக ஆந்திரா மற்றும் தமிழ்நாட்டின் பல பகுதிகளில் இருந்தும் 360–க்கும்.மேற்பட்ட போட்டியாளர்கள் பங்கேற்றனர்.

இதில் முதல் பரிசை சென்னையை சேர்ந்த சின்மய வித்யாலயாவும், இரண்டாம் பரிசு விசாகபட்டினத்தினை சேர்ந்த சி.டி.எஸ்.தேவ் பப்ளிக் பள்ளியும், மூன்றாம் பரிசு விருதுநகர் ராம்கோ வித்யாலயா பள்ளி மாணவர்களும் பெற்றனர். இப்போட்டியில் கலந்து கொண்டு வெற்றிபெற்றவர்கள் வருகின்ற ஏப்ரல் 2020–ல் டெல்லியில் நடைபெறவிருக்கும் இறுதிப் போட்டியில் போட்டியிடுவார்கள். இதன் மொத்த பரிசுத்தொகையானது ரூபாய் ஐந்து லட்சமாகும்.

கல்லூரியின் முதல்வர் எல். கணேசன், துணை முதல்வர் எஸ். ராஜகருணாகரன் மற்றும் கல்லூரியின் துணைப் பொது மேலாளர் கே. எஸ். செல்வராஜ் வழிகாட்டுதலின்படி இயந்திரவியல் துறை உதவிப்பேராசிரியர்கள் எம். லக்ஷ்மணன் மற்றும் ஜி.பிரபுராம் ஏற்பாடு செய்திருந்தார்கள்.

ThinaThanthi 04.02.2020





# சூரிய ஆற்றல் வாகன போட்டி

ராஜபாளையம்,பிப்.4–

ராஜபாளையம் ராம்கோ தொழில்நுட்பக் கல்லூரியில் தென்னிந்திய அளவிலான, பள்ளி மாணவர்களுக்கான, இந்தியாவின் முதல் மற்றும் தனித்துவ சூரிய ஆற்றல் வாகன போட்டி கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. விழாவில், சிறப்பு விருந்தினராக ராம்கோ குழுமத்தின் தலைமை கல்வி அதிகாரி முனைவர் ஆர். வெங்கட்ராஜ் கலந்துகொண்டார். போட்டியின் நடுவர்களாக சோனு சிங், பிரியங்க் சர்மா பங்கேற்றனர். நிதிஷ் வரவேற்றார். 4 சுற்றுகளாக நடைபெற்ற இப்போட்டியில் 13 பள்ளிகளில் இருந்து 36 குழுக்களாக போட்டியாளர்கள் பங்கேற்றனர். முதல் பரிசை சென்னையை சேர்ந்த சின்மய வித்யாலயாவும், 2–வது பரிசை விசாகபட்டினம் சி.டி.எஸ்.தேவ் பப்ளிக் பள்ளி, 3–வது பரிசை விருதுநகர் ராம்கோ வித்யாலயா பள்ளி மாணவர்களும் பெற்றனர். இப்போட்டியில் கலந்து கொண்டு வெற்றிபெற்றவர்கள் டெல்லியில் நடைபெற உள்ள இறுதிப் போட்டியில் போட்டியிடுவார்கள். கல்லூரியின் முதல்வர் முனைவர் கணேசன், துணை முதல்வர் ராஜகருணாகரன் மற்றும் கல்லூரியின் துணை பொது மேலாளர் செல்வராஜ் வழிகாட்டுதலின்படி எந்திரவியல் துறை உதவிப்பேராசிரியர்கள் லட்சுமணன் மற்றும் பிரபுராம் ஏற்பாடு செய்திருந்தார்கள்.

மாலை மலர்

4-2-2020 (செவ்வாய்க்கிழமை)



ராஜபாளையத்தில்

# மின்சார கார்கள் பயன்பாடு குறித்து விழிப்புணர்வு

ராஜபாளையம், பிப்.4-

ராஜபாளையத்தில் இந்தியாவிலேயே முதன் முறையாக சூரிய ஒளி மூலம் இயக்கப்படும் மின் கார்களின் நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

ராஜபாளையம் ராம்கோ தொழில் நுட்பக்கல்லூரி ஐ.எஸ்.ஐ.இ. இந்தியா இணைந்து நடத்திய இந்த நிகழ்ச்சியில் கல்லூரி முதல்வர் கணேசன் கொடி அசைத்து நிகழ்ச்சியைத் தொடங்கி வைத்தார்.

துணை முதல்வர் ராஜா கருணாகரன், ஐ.எஸ்.ஐ.இ. நிறுவனம் சார்பில் பிரியன்க் ஷர்மா, சோனு சிங் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு, ஆந்திரா உட்பட பல்வேறு மாநிலங்களில் இருந்து மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர். கார்களை இயக்கி சாதனை படைத்த மாணவ, மாணவிகளுக்கு பரிசு வழங்கப்பட்டது.

*Tamil Sudar* *04.02.2020*

# ராஜபாளையத்தில் சூரிய ஒளியில் இயங்கும் மினி வாகன போட்டிகள்



ராஜபாளையம்,பிப்.4

ராஜபாளையத்தில் இந்தியாவிலேயே முதன் முறையாக சூரிய ஒளி மூலம் இயக்கப்படும் மின் கார்களின் நிகழ்;ச்சி நடத்தப்பட்டது. ராஜபாளையம் ராம்கோ தொழில் நுட்பக் கல்லூரி ஐ.எஸ்.ஐ.இ. இந்தியா இணைந்து நடத்திய இந் நிகழ்ச்சியில் கல்லூரி முதல்வர் எல்.கணேசன் கொடி அசைத்து நிகழ்ச்சியைத் தொடக்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் துணை முதல்வர் ராஜா கருணாகரன் ஐ.எஸ்.ஐ.இ. நிறுவனம் சார்பில் பிரியன் சோனு சிங் உட்பட பலர் கலந்து கொண்டு இயக்கி வைத்தனர்.

நிகழ்ச்சியில் தமிழ்நாடு ஆந்திரா உட்பட பல்வேறு மாணவஜஜ மாணவியர் கலந்து கொண்டனர். சிறப்பாக இயக்கி சாதனை படைத்த மாணவ மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கி பாராட்டி னார்கள். விழாவில் இன்னும் 5 ஆண்டுகளில் இந்தியா முழுவதும் சூரிய மின் சக்தி மற்றும் பாட்டரிகளின் உபயோகம் அதிகரித்து இந்தியாவில் பெட்ரோல் டீசல் உபயோகம் குறைக்கப்படுவது உறுதி என தெரிவிக்கப்பட்டது.

மேலும் பிரிட்டன் அமெரிக்கா ஜெர்மனி போன்ற நாடுகளில் சூரிய மின் சக்தி உபயோகம் அதிகரித்து பெட்ரோல் டீசல் குறைக்கப்பட்டுள்ளதாகவும் இதன் மூலம் சுற்றுச் சூழல் மாசு குறைவதாகவும் உடல் நலன் பாதுகாக்கப்படு

*Vanakkam India* 04.02.2020

# ராஜபாளையத்தில் சூரிய ஒளியில் இயங்கும் மினி வாகன போட்டிகள்



ராஜபாளையம்,பிப்.4

ராஜபாளையத்தில் இந்தியாவிலேயே முதன் முறையாக சூரிய ஒளி மூலம் இயக்கப்படும் மின் கார்களின் நிகழ்;ச்சி நடத்தப்பட்டது. ராஜபாளையம் ராம்கோ தொழில் நுட்பக் கல்லூரி ஐ.எஸ்.ஐ.இ. இந்தியா இணைந்து நடத்திய இந் நிகழ்ச்சியில் கல்லூரி முதல்வர் எல்.கணேசன் கொடி அசைத்து நிகழ்ச்சியைத் தொடக்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் துணை முதல்வர் ராஜா கருணாகரன் ஐ.எஸ்.ஐ.இ. நிறுவனம் சார்பில் பிரியன் சோனு சிங் உட்பட பலர் கலந்து கொண்டு இயக்கி வைத்தனர்.


நிகழ்ச்சியில் தமிழ்நாடு ஆந்திரா உட்பட பல்வேறு மாணவஜஜ மாணவியர் கலந்து கொண்டனர். சிறப்பாக இயக்கி சாதனை படைத்த மாணவ மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கி பாராட்டி னார்கள். விழாவில் இன்னும் 5 ஆண்டுகளில் இந்தியா முழுவதும் சூரிய மின் சக்தி மற்றும் பாட்டரிகளின் உபயோகம் அதிகரித்து இந்தியாவில் பெட்ரோல் டீசல் உபயோகம் குறைக்கப்படுவது உறுதி என தெரிவிக்கப்பட்டது.

மேலும் பிரிட்டன் அமெரிக்கா ஜெர்மனி போன்ற நாடுகளில் சூரிய மின் சக்தி உபயோகம் அதிகரித்து பெட்ரோல் டீசல் குறைக்கப்பட்டுள்ளதாகவும் இதன் மூலம் சுற்றுச் சூழல் மாசு குறைவதாகவும் உடல் நலன் பாதுகாக்கப்படு

தினச்சூரியன்
05.02.2020



# ராஜபாளையத்தில் இந்தியாவில் முதன் முறையாக சூரிய ஒளியில் இயங்கும் மினி வாகன போட்டிகள்



ராஜபாளையம், பிப்.05-

ராஜபாளையத்தில் இந்தியாவிலேயே முதன் முறையாக சூரிய ஒள மின் சக்தி மூலம் மினி கார்களை இயக்கி போட்டிகள் நடத்தப்பட்டது. இதில் தமிழ்நாடு, ஆந்திர மாநிலம் உட்பட் பல்வேறு பகுதிகளில் இருந்து மாணவ, மாணவியர் பங்கேற்று கார்களை இயக்கி அசத்தினார்கள்.

சர்வதேச அளவில் பெட்ரோல், டீசல் மற்றும் எரிவாயுக்களின் உபயோகம் அதிகரித்து வருகிறது. எனவே இவைகளின் மீதான பங்கேற்பை குறைக்க சூரிய ஒளி, மின்சாரம் மற்றும் பாட்டரிகளின் உபயோகம் மிகவும் அத்தியாவசியமாகிறது. ராஜபாளையத்தில் இந்தியாவிலேயே முதன் முறையாக சூரிய ஒள மூலம் இயக்கப்படும் மின் கார்களின் நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

ராஜபாளையம் ராம்கோ தொழில் நுட்பக் கல்லூரி ஐ.எஸ்.ஐ.இ. இந்தியா இணைந்து நடத்திய இந் நிகழ்ச்சியில் கல்லூரி முதல்வர் எல்.கணேசன் கொடி அசைத்து நிகழ்ச்சியைத் தொடக்கி வைத்தார். நிகழ்ச்சியில் துணை முதல்வர் ராஜா கருணாகரன், ஐ.எஸ்.ஐ.இ. நிறுவனம் சார்பில் பிரியன்க் ஷர்மா, சோனு சிங் உட்பட பலர் கலந்து கொண்டு இயக்கி வைத்தனர். நிகழ்ச்சியில் தமிழ்நாடு, ஆந்திரா உட்பட பல்வேறு மாநிலங்களிலிருந்து மாணவ, மாணவியர் கலந்து கொண்டனர்.

சிறப்பாக இயக்கி சாதனை படைத்த மாணவ, மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கி பாராட்டினார்கள். விழாவில் இன்னும் 5 ஆண்டுகளில் இந்தியா முழுவதும் சூரிய மின் சக்தி மற்றும் பாட்டரிகளின் உபயோகம் அதிகரித்து இந்தியாவில் பெட்ரோல், டீசல் உபயோகம் குறைக்கப்படுவது உறுதி என தெரிவிக்கப்பட்டது.

மேலும் பிரிட்டன், அமெரிக்கா, ஜெர்மனி போன்ற நாடுகளில் சூரிய மின் சக்தி உபயோகம் அதிகரித்து பெட்ரோல், டீசல் குறைக்கப்பட்டுள்ளதாகவும், இதன் மூலம் சுற்றுச் சூழல் மாசு குறைவதாகவும், உடல் நலன் பாதுகாக்கப்படுவதாகவும் தெரிவித்தனர்.

*DinaSangu* 05.02.2020

# ராம்கோவின் ஆர்ஐடி பொறியியல் கல்லூரியில் மாணவர்களுக்கான மின் சக்தி வாகனம் போட்டி

ராஜபாளையம், பிப். 5-

ராஜபாளையம் ராம்கோ இன்ஸ்டிடியூட் ஆஃப் டெக்னாலஜி பொறியியல் கல்லூரியில் தென்னிந்திய அளவிலான மாணவ, மாணவிகளுக்கு சூரிய சக்தி வாகனம் மற்றும் விஞ்ஞான அறிவுக்கான போட்டிகள் நடந்தது. முதல் 3 இடங் களில் வென்ற மாணாக்கர்கள் ரூ. 50 ஆயிரம் ரொக்கப்பரிசுகள் பெற்றனர்.

ராம்கோ கல்வி நிறுவனங்களின் சிஇஓ. ஆர். வெங்கட்ராஜ் தலைமை வகித்தார். போடடிகளின் நடுவர்களாக ரெனால்ட் நிசான் டெக்னாலஜி மற்றும் பிசினஸ் சென்டர் பி. லிட்., நிர்வாகி சோனுசிங், ஐ.எஸ்.ஐ.இ. இந்தியா லிட் உதவி மானேஜர் பிரியங்கா சர்மா கலந்து கொண்டனர். இயற்பியல்துறை 4ம் ஆண்டு மாணவரும், ஆர்.ஐ.டி. பீனிக்ஸ் கேப்டனுமான நிதிஷ் வரவேற்றார். தலைமை வகித்த ராம்கோ கல்வி நிறுவனங்களின் சிஇஓ ஆர். வெங்கடராஜ் பேசுகையில், இன்றைய இளைஞர்களை ஊக்குவிக்கவும், விஞ்ஞானிகளாக, பொறியாளர்களாகவும் மாணவர்கள் புதிய வாகனம் மற்றும் எரிபொருள் சிக்கனம் தொழில்நுட்பங்களை உறுவாக்கும் குடிமக்களாகவும், சுற்றுச்சூழல் மற்றும் பொருளாதார தேவைகளை சமநிலைப்படுத்தும் முடிவுகளை எடுப்பார்கள். என்று மாணவர்களின் திறமைகளை பெருமைபடுத்திய அவர், இவ்வுலகம் புதுப்பிக்க முடியாத எரிசக்தி ஆதாரங்களை நோக்கி நகர்கிறது. என்று பேசினார். சோனுசிங் பேசுகையில், தற்போதைய தொழில் நுட்பமானது, எவரிடம் தனித்துவம், திறமையும் உள்ளதோ அவர்களை வரவேற்க தயாராக உள்ளோம். என்றார். பிரியங்கா சர்மா பேசுகையில், கடந்த 10 ஆண்டு காலமாக பள்ளி மாணவ, மாணவிகளை இது போன்ற விஞ்ஞான அறிவு வளர்ச்சி போட்டிகளில் பங்கேற்கச் செய்து வருகின் றோம். என்றார். தொடர்ந்து, ஆர்.ஐ.டி முதல்வர் முனைவர் கணேசன், பிரியங்கா சர்மா, சோனுசிங் ஆகியோர் கொடி அசைத்து விஞ்ஞான சூரிய சக்தி வாகன போட்டியை துவக்கி வைத்தனர்.




போட்டிகளில் பங்கேற்ற மாணவ, மாணவிகளை ஊக்குவிக்கம் பொருட்டு 6 பேர்களுக்கு சிறப்பு பரிசுகளும் மற்றவர்களுக்கு ரொக்கப் பரிசுகளும் வழங்கப்பட்டன. இங்கு நடந்த போட்டிகளில் வெற்றி பெற்றவர்கள் வரும் ஏப்ரல் 2020ல் டெல்லியில் நடக்கும் இறுதிப் போட்டியில் பங்கேற்ப்பார்கள். என போட்டிகளை நடத்திய உதவி பேராசிரியர்கள் லக்ஷமணன், பிரபுராம் தெரிவித்தனர். போட்டிக்கான பரிசுத்தொகையினை எம்.எஸ்.எம்.இ., எம்.என். ஆர்.இ., எஃப்.எஸ்.எம்.ஐ. ஹீரோ எலக்ட்ரிக் மற்றும் ஆர்.ஐ.டி. பொறி யியல் கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கம் இணைந்து வழங்குகிறது. என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

ராஜபாளையத்தில் நடந்த போட்டியின் மொத்த பரிசுத் தொகை ரூ.50 ஆயிரம். டெல்லி இறுதிப் போட்டியின் மொத்த பரிசுத் தொவை ரூ. 5 லட்சம் ஆகும். ராம்கோ இன்ஸ்டிடியூட் ஆஃப் டெக்னாலஜி பொறியியல் கல்லூரியில் நடந்த விஞ்ஞான அறிவு வளர்ச்சி போட்டி ஏற்பாடுகளை ஆர்.ஐ.டி. முதல்வர் முனைவர் கணேசன், துணை முதல்வர் முனைவர் ராஜகருணாகரன், ஆர்ஐடி. கல்லூரி டி.ஜி.எம். செல்வராஜ் ஆகியோரின் வழிகாட்டுதலின்படி ஆர்ஐடி இயந்திரவியல்துறை உதவி பேராசிரியர்கள் லக்ஷமணன், பிரபுராம் வெகு சிறப்பாக செய்திருந்தனர்.